Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 131

திங்கட்கிழமை
06 ஏப்ரல் 2026

பங்குனி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் -12
விலை - ரூபா 50

## விபத்தில் சிக்கிய முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப்.6
மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளான 70 வயது குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அத்தியடியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. சேவியர் சவுந்தரநாயகம் (வயது-70) என்பவரே உயிரிந்தவராவார். »11

## எரிபொருளுடன் இம்மாதம்
# 9 கப்பல்கள் வருவதால் கட்டுப்பாடுகள் தளரும்
### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 6
இந்த மாதம் 9 எரிபொருள் கப்பல்கள் நாட்டுக்கு வரவுள்ளன. அதனால் விரைவில் புதன்கிழமை விடுமுறையையும், கியூ.ஆர் முறைமை, ஒற்றை இரட்டை இலக்க முறைமைகளை நீக்கி நிலமையை வழமைக்குக் கொண்டுவர முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். »11

## எரிபொருள் வழங்க சீனா பச்சைக்கொடி

கொழும்பு, ஏப்.6
இலங்கைக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கு சீனா முன்வந்துள்ளது என ஆங்கில இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
எரிபொருள் கையிருப்பை உறுதிசெய்வதற்காக இந்தியா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகளிடம் இலங்கை உதவி கோரி இருந்தது. இதற்குரிய இராஜதந்திர ரீதியிலான பேச்சுகளும் இடம் »11

## ளிபொருள் பதுக்கிய 31 பேர் இதுவரை கைது

கொழும்பு, ஏப்.6
கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி முதல் நேற்று (நேற்றுமுன்தினம்) வரை எரிபொருளைச் சட்டவிரோதமாகச் சேமித்து வைத்திருந்த குற்றச்சாட்டில் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கடந்த ஒரு மாத காலமாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப் பட்ட விசேட »11

## ரஷ்யா செல்கிறார் அமைச்சர் விஜித

கொழும்பு, ஏப்.6
இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அடுத்த மாதம் ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. எரிபொருள், நிலக்கரி மற்றும் உரம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகப் பேச்சு நடத்துவதற்காகவே அவர் மொஸ்கோ செல்லவுள்ளார்.
ரஷ்யாவின் »11

## மாயமான மீனவர்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.6
மீன்பிடிக்காகக் கடலுக்குச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்த சுப்பர்மடத்தைச் சேர்ந்த »11

## பெற்றோலிய விநியோகஸ்தர் இன்று அமைதிப் போராட்டம்!

கொழும்பு, ஏப்.6
எரிபொருள் நிலையங்களின் செயற்பாடுகளைப் பாதிக்கும் பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சினைகளை முன்வைத்து இன்று காலை 9.30 மணிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக அமைதிப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று பெற்றோலிய விநியோகஸ்தர் சங்கம் அறிவித்துள்ளது. பெற்றோலிய விநியோகஸ்தர் சங்கத்தின் »11

## ஒரேநாளில் 592 பேர் கைது

விரிவு பக்கம்:- 05

## லிட்ரோ, லாஃப்ஸ்
# எரிவாயு விலைகள் 'கிடுகிடு' அதிகரிப்பு!



கொழும்பு, ஏப்.6
நேற்று நள்ளிரவு நடைமுறைக்கு வரும்வகையில், லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.
லிட்ரோ 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 775 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 4,765 ரூபாவாகும்.
5 கிலோ கிராம் நிறையுடைய »11



## இலங்கைக்கு நேராக உச்சத்தில் சூரியன்

ஏப்ரல் 15 வரை கடும் வெப்பம்

விரிவு பக்கம்:-05

முச்சந்தி முரளி

"திரைகடலோடியும் திரவியம் தேடு எண்டதை திசைகாட்டிக்காரர் நல்லாவே பின்பற்றுகினம் கண்டியளோ"

# பேச்சு மேசைக்கு வர இன்றுவரை அவகாசம்
### மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.6
மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுகளை முன்னெடுப்ப தற்கு சுகாதார அமைச்சருக்கு நாளை (இன்று) காலை 8 மணிவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் »11

## டிஜிட்டல் கொடுப்பனவை ஊக்குவிப்பதற்கு திட்டம்!
### இன்று ஆரம்பமாகின்றது

கொழும்பு, ஏப்.6
தேசிய கியூ.ஆர். கொடுப்பனவு ஊக்குவிப்புத் திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. நாணயங்கள் மற்றும் நாணயத் தாள்களின் பயன்பாடு குறைந்த பொருளாதாரத்தை நோக்கி »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4397 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 12 15 58 65 |
| விசேட எழுத்து | O |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1464 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 15 32 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0423 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 7 5 0 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2503 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கங்கள் | 49 71 77 78 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6155 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 5 3 2 9 7 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2185 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 29 37 38 59 |
| விசேட எழுத்து | J |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0271 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 37 67 |

# இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தாவிடில் ஆளுநர் செயலகம் முற்றுகையிடப்படும்!

## ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப்.6**

**வடமாகாணத்தில் இடமாற்றச் சபையூடாக வருடாந்த இடமாற்றங்களைப் பெற்ற ஆசிரியர்களை உரிய பாடசாலைகளில் பொறுப்பேற்க அனுமதிக்காவிடில், ஆளுநர் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்துள்ளதாவது-

வெளிமாவட்டங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் சுமார் 300 ஆசிரியர்களில், 'சேவையின் தேவை' கருதிய இடமாற்றப்பட்டியலில் உள்ள 193 பேர் மட்டுமே விடுவிக்கப்படுவார்கள் என ஆளுநர் தெரிவித்துள்ள கருத்து ஆசிரியர்களிடையே கடும் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. மாகாணக் கல்விப் பணிப்பாளரைச் சுதந்திரமாகச் செயற்படவிடாமல், ஆளுநரும் கல்வி அமைச்சின் செயலாளரும் முறைகேடான தலையீடுகளை மேற்கொள்கின்றனர். அரசியல் உள்நோக்கத்துடன் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 'சேவையின் தேவை' கருதிய இடமாற்றங்களை நிறுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது அதிகாரிகளின் தன்னிச்சையான போக்குக்குச் சிறந்த பதிலடி. பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கும் தினத்தில், இடமாற்றச்சபையால் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது புதிய பாடசாலைகளைப் பொறுப்பேற்க அனுமதிக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில்ஆளுநர்செயலகம்முற்றுகையிடப்படும்.

விசாரணை முடிந்ததும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்ய அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

வடக்கின் ஆளுமையற்ற ஆளுநர் பதவிவிலகவேண்டும். இல்லாவிட்டால் எதிர்வரும் காலத்தில் அவரின் முறைகேடுகள் அம்பலப்படுத்தப்பட்டு, அவருக்கு எதிராக தொழிற்சங்கப் போராட்டத்தை மேற்கொள்வோம்-என்றார். (க-20)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0863 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 3 3 8 3 3 3 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3129 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 15 26 34 69 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 02 14 15 18 |
| வெற்றி வாரம் | 5290 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0959 |
| வெற்றி இலக்கம் | 25 38 50 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| | கும்பம் |
| வெற்றி இலக்கம் | 06 17 28 32 |
| சீட்டிழுப்பு வாரம் | 4841 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 37 |
| வெற்றி இலக்கம் | 08 71 73 75 |
| வெற்றி வாரம் | 2305 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 05.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 18 38 45 53 |
| வெற்றி வாரம் | 2955 |

# மின்கட்டண அதிகரிப்பு மக்கள் முதுகில் சுமை!

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.6

அரசாங்கம் திடீரென மின்சாரக் கட்டணத்தை அதிகரித்தமை நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களைச் சொல்லொணாத் துயரத்துக்கு உள்ளாக்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் மின்கட்டணத்தை 33% குறைப்பதாகத் தற்போதைய அரசாங்கம் உறுதியளித்தது. ஆனால், தற்போது கட்டணத்தை 40% அதிகரித்துள்ளது. இதன்மூலம் நாட்டின் 6.7 மில்லியன் நுகர்வோரில் சுமார் 5.2 மில்லியன் பேர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மத்திய கிழக்கு போர்ச்சூழலை அரசாங்கம் ஒரு காரணமாகக் கூறினாலும், உண்மை நிலை வேறு. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்குத் தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்தமையே இந்த நெருக்கடிக்குக் காரணம். இதனால் தேசிய மின் கட்டமைப்புக்குக் கிடைக்கவேண்டிய 150 மெகாவாட் மின்சாரம் இழக்கப்பட்டுள்ளது. இந்த இழப்பை ஈடுகட்ட அதிக விலைக்கு டீசல் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதால் ஏற்படும் நஷ்டத்தையே அரசாங்கம் மக்கள் மீது சுமத்தியுள்ளது. அரசாங்கம் குறுகிய காலத்தில் 1.4 பில்லியன் டொலர் கடனைப் பெற்றுள்ள போதிலும், அதனால் மக்களுக்கோ அல்லது பொருளாதாரத்துக்கோ எந்தப் பயனும் கிடைக்கவில்லை. 2026 மற்றும் 2027 ஆண்டுகளில் நாடு இன்னும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் - என்றார். (ச-இ)



# ஒரு மருத்துவரை உருவாக்குவதற்கு ரூ.60 இலட்சம் அரசாங்கம் செலவு!

## அமைச்சர் உபாலி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.6

இலங்கையில் ஒரு மருத்துவரை உருவாக்கி வெளியேற்றுவதற்கு மக்கள் வரிப்பணத்திலிருந்து சுமார் 60 இலட்சம் ரூபா அரசாங்கத்தினால் செலவிடப்படுகின்றது. கல்வியின் மதிப்பையும் உணர்ந்து, சமூகத்தில் தமக்குரிய விசேட பொறுப்புடன் மருத்துவர்கள் செயற்படவேண்டும் என்று அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய உயர்கல்வித் துறைகளுடன் ஒப்பிடுகையில் மருத்துவக் கல்விக்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

ஒரு பொறியியலாளரை உருவாக்க அரசாங்கத்துக்கு 30 இலட்சம் ரூபா செலவாகிறது. ஆனால், ஒரு மருத்துவ மாணவர் ஐந்து வருடப் படிப்பை முடித்து மருத்துவராக வெளியேற 60 இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது. இது பொறியியலாளருக்கான செலவை விட இரண்டு மடங்கு அதிகம். சுதந்திரத்துக்குப் பின்னரான அனைத்து அரசாங்கங்களும் இலவச சுகாதாரச் சேவையை வழங்குவதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளன. அரசாங்கம் மற்றும் மக்கள் அவர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையையும், அவர்கள் பெற்றுக்கொண்ட இலவசக் கல்வியின் மதிப்பையும் உணர்ந்து, சமூகத்தில் தமக்குரிய விசேட பொறுப்புடன் மருத்துவர்கள் செயற்படவேண்டும் - என்றார். (ச-இ)

# இலவசசுகாதாரச்சேவைக்கு அரசாங்கத்தால் சாவுமணி!

## மருத்துவர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.6

இலங்கையின் இலவச சுகாதாரச் சேவையைச் சீர்குலைத்து, அதனைச் சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப தனியார்மயமாக்க அரசாங்கம் திட்டமிட்ட சதியில் ஈடுபட்டுள்ளதாகச் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது சுகாதார சேவை மிகப்பெரிய மனிதவள நெருக்கடியைச் சந்தித்துள்ளது. 2000 முதல் 2500 வரையான தட்டுப்பாடு நிலவுகிறது. சுமார் 1000 பேருக்கான தட்டுப்பாடு காணப்படுகிறது.

தேசிய மருத்துவமனைக்கு ஒரு நிரந்தர பிரதிப் பணிப்பாளரைக்கூட நியமிக்கமுடியாத அளவுக்கு அமைச்சின் நிர்வாகம் குளறுபடியாக உள்ளது. மருத்துவர்களின் தொழில்சார் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்குப் பதிலாக, அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை ஒடுக்கவும் அச்சுறுத்தவும் சுகாதார அமைச்சர் முயற்சிக்கிறார்.

மக்களைப் பகடைக்காய்களாக்கி அரசியல் ஆதாயம் தேடும் இந்தச் செயற்பாட்டை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி இந்த அரசிலும் எட்டாக்கனி

## ஈஸ்டர் வாழ்த்துச்செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.6**

**2019 ஏப்ரல் 21 அன்று நடத்தப்பட்ட கொடூரமான தற்கொலைத் தாக்குதல்கள் நடந்து ஏழு ஆண்டுகள் கடந்துள்ளநிலையிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படாமை ஒரு நாட்டின் தோல்வியை எடுத்துக் காட்டுகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் தனது ஈஸ்டர்தின வாழ்த்துச்செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது- ஈஸ்டர் பண்டிகை என்பது நம்பிக்கை மற்றும் மீண்டெழுதலின் அடையாளம். 2019 ஏப்ரல் 21 அன்று நடத்தப்பட்ட கொடூரமான தற்கொலைத் தாக்குதல்கள் நடந்து ஏழு ஆண்டுகள் கடந்துள்ளநிலையிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை.

அந்தப் பேரழிவில் உயிரிழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நீதி வழங்க முன்னைய அரசாங்கத்தாலும் சரி, தற்போதைய அரசாங்கத்தாலும் சரி இயலவில்லை. இது ஒரு நாடாக நாம் அடைந்த மாபெரும் தோல்வி. பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையை வெளிக்கொணருவதும், அவர்களுக்கு நீதி வழங்குவதும் அரசாங்கத்தின் தவிர்க்கமுடியாத அரசியலமைப்பு ரீதியான பொறுப்பு. சட்டத்தின் ஆட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் மூலம் மட்டுமே ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியிலுள்ள உண்மைகளை நிலைநாட்டமுடியும். மீண்டும் ஒருபோதும் இத்தகையதொரு கருப்பு அத்தியாயம் இலங்கையில் நிகழாதவாறு, ஒரு வலிமையான தேசத்தைக் கட்டியெழுப்ப அனைத்து இன மற்றும் மத மக்களும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ச-இ)

# சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்க மஹிந்த குடும்பத்துக்குக் காலக்கெடு

கொழும்பு, ஏப்.6

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினர், 2010ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய தங்களது சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்களைச் சத்தியக்கடதாசிமூலம் சமர்ப்பிக்கவேண்டும் என இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய ஊழல் எதிர்ப்புச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விவரங்களும் சமர்ப்பிக்கப்படவேண்டும். 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த விசாரணை நீண்டகாலமாகத் தாமதமடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழு, ஏப்ரல் 10ஆம் திகதிக்கு மேல் எக்காரணம் கொண்டும் மேலதிக காலம் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளது. அதேவேளை மஹிந்த ராஜபக்சவைத் தவிர, ஏனைய பல முக்கியமான அரசியல்வாதிகளுக்கும் இவ்வாறான அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

குறித்த காலப்பகுதிக்குள் விவரங்களை வழங்கத் தவறினால், அவர்களுக்கு எதிராகச் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழு எச்சரித்துள்ளது. (ச-இ)





# அன்னை பூபதியின் 38 ஆவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.6 .

இந்திய இராணுவத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகத் தொடர்ச்சியாக உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த நாட்டுப் பற்றாளர் அன்னை பூபதியின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, மல்லாகத்தில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நினைவுரையைச் செல்வராசா கஜேந்திரன் நிகழ்த்தினார். (க-66)

# டிஜிற்றல் சேவைகளுக்கான வற்வரி மீண்டும் ஒத்திவைப்பு




கொழும்பு,ஏப்.6

இலங்கையில் வெளிநாட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் டிஜிற்றல் சேவைகளுக்காக விதிக்கப்படவிருந்த 18 சதவீத வற்வரி நடைமுறைப்படுத்தப்படுவது மீண்டும் ஒரு முறை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான விசேட சுற்றறிக்கையை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வெளியிட்டுள்ளது. புதிய தீர்மானத்தின்படி இந்த வரி விதிப்பு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த வரி விதிப்பு நடவடிக்கை ஏற்கனவே இருமுறை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. முதலில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டது. பின்னர் அது இந்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. தற்போது தொழில்நுட்பக் காரணங்களால் இரண்டாவது முறையாக ஜூலை 1வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

# செத்தாலும் நிம்மதியில்லை!

வவுனியா, மகாறம்பைக்குளத்துக்குப் பக்கத்தில கருப்பணிச்சான்குளம் எண்டொரு சுடலை இருக்கு. அங்க ஒரு 'பொடியை' எரிக்கக்கொண்டு போனவை சுடலையை நெருங்கமுடியாத அளவுக்கு, குடலைப் பிடுங்கிற நாத்தம் வந்ததால, மூக்கப் பொத்திக்கொண்டு என்ன ஏதெண்டு போய்ப் பார்த்திருக்கினம். பார்த்தவைக்கு பயத்தில ஈரக்குலையே தீய்ஞ்சு போட்டுதாம். அந்தச் சுடலையில மூண்டுமாசத்துக்கு முதல் தவறான முடிவெடுத்துச் செத்துப்போன ஒருத்தரை கிடங்கு வெட்டித் தாட்டு, அடக்கம் செய்திருந்தவை. அந்தக் கிடங்கை தோண்டி,சவப்பெட்டியை உடைச்சு, தாட்டவரின்ர தலையை மட்டும் ஆரோ வெட்டியெடுத்துப் போட்டு, கிடங்கை மூடாமல் போட்டாங்கள், அதால தான் இப்பிடியொரு நாத்தமாம். அப்பிடி அவை கிடங்கை மூடாமல் போனதாலதான் இப்பிடியொரு பயங்கரம் நடந்ததெண்ட விசயமே வெளியால தெரியவந்தது. அவை கிடங்கை மூடியிருந்தால், நாத்தமும் அடிச்சிருக்காது, தலைவெட்டிக் கொண்டு போன விசயமும் ஆருக்கும் தெரிஞ்சிருக்காது. இதுக்கு முதலும், ரண்டு வருசத்துக்கு முந்தி இப்பிடிக் கிடங்கில தாட்ட சின்னப்பெடியன்ர சடலத்தையும் ஒரு கும்பல் தோண்டியெடுத்துக் கொண்டு போனது. அதைச் செய்தது ஆரெண்டும் இன்னமும் தெரியாது.

'இப்பிடிச் செத்தவரின்ர தலையை வெட்டி எடுத்துக் கொண்டு போறளவுக்கு அவரில ஆருக்கும் கோபம் இருக்குமோ ?' எண்டு நீங்கள் நினைக்கலாம். ஆனால், இதில இருக்கிற மர்மமே வேற. வவுனியாவிலையோ இல்லாட்டி அதைத்தாண்டியோ இருக்கிற 'பில்லி சூனியம்' செய்யிற கூட்டத்தின்ர கைவரிசை தான் இது எண்டு சனம் அடிச்சுச் சொல்லுது.'தலைச்சான் பிள்ளையளின்ர எலும்புக்கும், 'அகால மரணம்' அடைஞ்சவையின்ர' மண்டையோட்டுக்கும் பயங்கரமான மாந்திரீக சக்தி இருக்கு எண்டு ஒரு மூடநம்பிக்கை பில்லிசூனியம் செய்யிறவையின்ர மண்டைக்குள்ள ஊறிப்போய்க் கிடக்கு.

தலைச்சான் பிள்ளையளின்ரையும், அகால மரணமடையின்ரையும் ஆத்மாக்கள் சாந்தியடையாம அலைஞ்சு கொண்டிருக்குமாம், அதால அவையளின்ர எலும்பை வைச்சு செய்யிற சூனியம் கட்டாயம் பலிக்கும் எண்டு இந்தச் சூனியக்காரர் நம்புகினம். ஆனால் அப்பிடி எலும்புகளையும்,மண்டையோடுகளையும் அவைக்கு எடுக்கிறது அவ்வளவு ஈஸி இல்லை. அதால தான் இப்பிடி சுடலையளுக்குள்ள தாட்ட சவங்களில இருந்து தலையையும், எலும்புகளையும் எடுக்கிறவையாம்.ஆனால் உந்தப் பில்லிசூனியக்காரர் தாங்கள் நேரடியா சுடலைக்குப் போய் உதுகளை எடுக்கிறேலை. காசுக்கும் கள்ளுக்கும் ஆசைப்படுற சில 'பாதகக் கும்பல்களை' ஏவி விடுவினம். அவையும் ஆக்கள் நடமாட்டமில்லாத இரவுநேரங்களில அதுவும் பறுவ காலத்தில தான் (பௌர்ணமி நாளில) சத்தமில்லாம சவக்கிடங்கைத் தோண்டி இப்பிடி மண்டையோடு, எலும்புகளை எடுக்கிறவையாம்.

ஒரு பக்கம் 'செயற்கை நுண்ணறிவு' எண்டு உலகமே டிஜிற்றல் மயமாகி, மனுசன் செவ்வாய்க் கிரகத்தில குடியே றப் பிளான் போடுறான். ஆனா, எங்கட ஆக்கள் இன்னும் 'மண்டையோடு' கிடைச்சா மந்திரிச்சு எதையோ சாதிக்கலாம் எண்டு திரியுறதைப் பார்த்தால் சிரிக்கிறதா அழுகிறதா எண்டே தெரியேலை. செத்தவையைக்கூட சவக்கிடங்குக்க நிம்மதியா இருக்கவிடாத இந்தச் சமுதாயத்தை நினைச்சா, தலையே சுத்துது கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு ஆராதனை கிளிநொச்சி புனித திரேசாள் தேவாலயத்தில், கிளிநொச்சி மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்தந்தை கி.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. (க-113)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் வருடாந்தப் பொலிஸ் பரிசோதனை, பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி முஹமட் சுல்தான் நஜீம் தலைமையில் நேற்று நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் டி.குணசேகர பொலிஸ் பரிசோதனையை முன்னெடுத்தார். இதன்போது பொலிஸாரின் சீருடைகள், வாகனங்கள் மற்றும் சொத்துகள் அனைத்தும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (க-113)





2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் யாழ்.மாவட்டத்தில் முதல் நிலை பெற்று சித்தியடைந்த யாழ். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவியான தேவதாஸ் கிஷானிக்கு நியூ லலிதா நகைமாடம் மோதிரம் வழங்கிக் கௌரவித்துள்ளது. (ச-இ)



முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை, நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில்சென்று பாராட்டியதுடன், அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தார். (க-246)

## பொங்கல் உற்சவம்

யாழ்ப்பாணம். ஏப்.6

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. அதிகாலை 5.30 மணியளவில் உஷக் காலப் பூஜையும், காலை 6 மணியளவில் வழுந்துப்பானை வைத்தலுடன் பொங்கல் வழிபாடுகளும், காலை 7 மணியளவில் ஸ்நபன அபிஷேகமும் இடம்பெறும். காலை 8 மணியளவில் காலைப் பூஜை ஆரம்பமாகித் தொடர்ந்து கூட்டு வழிபாடும், மு.ப.10 மணியளவில் ஸ்நபன அபிஷேகம் ஆரம்பமாகி நிறைவு பெறும். மு.ப.11 மணியளவில் உச்சிக் காலப் பூஜையும், மு.ப.11.30 மணியளவில் வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்றுத் தொடர்ந்து துர்க்காதேவி உள்வீதி எழுந்தருளி உலாவருவார். மாலை 4 மணியளவில் சாயரட்சைப் பூஜையும், மாலை 4.30 மணியளவில் வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்று தொடர்ந்து துர்க்காதேவி உள்வீதி, வெளிவீதி உலாவரும் திருக்காட்சி இடம்பெறும். இரவு 7 மணியளவில் அர்த்தசாமப் பூஜையைத் தொடர்ந்து வருடாந்தப் பொங்கல் உற்சவம் நிறைவு பெறுமென ஆலய நிர்வாகத் தினர் தெரிவித்துள்ளனர். (41-66)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.6

பருத்தித்துறை கோட்டுவாசல் அருள்மிகு சண்டிகா பரமேஸ்வரி கோவில் வசந்த மண்டப கும்பாபிஷேகம் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.10 மணி முதல் 10மணி வரை இடம்பெறவுள்ளது. 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும். அடியவர்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக கலந்து கொண்டு அம்பாளின் அருளினைப் பெற்றுய்யுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ச-41-100)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும்.ஒரு சிலருக்குப் புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையானபணம்கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். சிலருக்குஎதிர்பாராதபணவரவுக்கும்வாய்ப்புஉண்டு. அலுவலகத்தில் பணிச்சுமை சற்று அதிகரிக்கும்.

**மிதுனம்:** காரியங்களில்அனுகூலம்உண்டாகும். ஆனால்,குடும்பம்தொடர்பானமுக்கியமானமுடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். உறவினர்களுடன் மனஸ்தாபம்ஏற்படவாய்ப்புஇருப்பதால்அவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடிவரும். பொறுமை அவசியம்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மனதில்தைரியமும்தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகமுடியும்.

**விருச்சிகம்:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஒருவர் தேவையை மற்றவர் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தடைகளும் தாமதமும் ஏற்படக்கூடும்

**மீனம்:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# மேலும் வதைக்காதீர்..!

தொழிற்சங்க நடவடிக்கைகள், போராட்டங்கள் இவையெல்லாம் நாட்டில் மீண்டும் இயல்பான விடயங்களாக மாறிவருகின்றன. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் காலத்தில் தாராளம் பெற்றிருந்த தொழிற்சங்க நடவடிக்கைகள், அதன் பின்னர் ரணிலின் காலத்தில் ஓரளவு குறைந்திருந்தன. தற்போதைய ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது ஆண்டு ஆட்சிக்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள் எப்போதாவது அரிதாக இடம்பெறும் விடயமாகத்தான் ஆரம்பத்தில் இருந்தன. ஆனால், நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெறும் சம்பவங்களும், போராட்டங்களும், பேரணிகளும், தொழிற்சங்க நடவடிக்கைகளும் நல்ல அறிகுறிகளாக இல்லை. இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகவே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரின் அண்மைய தொழிற்சங்க நடவடிக்கைகளைக் குறிப்பிடமுடியும்.

இலங்கை அண்மைக்காலமாக எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, பல்வேறு துறைகள் மீளமுடியாப் பின்னடைவைச் சந்தித்துள்ளன என்பது வெளிப்படையான அவதானிப்பு. அதிலொன்றுதான் மருத்துவத்துறை. இலங்கையில் மருத்துவ நெருக்கடிகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன என்று, சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் அரசாங்கத்துக்கு அண்மைக் காலமாக தொடர் எச்சரிக்கைகளை விடுத்தபோதும், அரசாங்கம் அதுதொடர்பில் அக்கறை காட்டுவதுபோன்று தெரியவில்லை. அத்துடன், இடமாற்றங்கள், பணி நியமனங்கள் உள்ளிட்ட விடயங்களிலும் அமைச்சுக்கும் தொழிற்சங்கத்துக்கும் இடையில் பெரும் கருத்துவேறுபாடு காணப்படுகின்றது. இந்தத் தாக்கங்கள் அனைத்தினதும் கூட்டு விளைவாகவே தற்போதைய தொழிற்சங்க நடவடிக்கை அமைந்துள்ளது என்றால் அது மிகையில்லை.

'நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன' என்று அரசாங்கத்தினரும், துறைசார் அமைச்சரும் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றனர். மருத்துவர்களின் நியமனங்கள், பணி விவகாரங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெறுகின்றது என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். எனினும், நிலைமைகளில் எந்த சாதகமான மாற்றமும் ஏற்பட்டதாக இல்லை. நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு வாரத்துக்கு வாரம் சர்ச்சையும் சிக்கல்களும் நிறைந்ததாகவே மாறிவருகின்றது. இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்கள் இனியும் தொடருமானால், மருத்துவக் கட்டமைப்பு முழுமையாகவே முடங்கிவிடும் ஆபத்தும் இருக்கவே செய்கின்றது. ஆதலால், நிலைமையின் தீவிரத்தை அரசாங்கமும், மருத்துவர்களும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

மருத்துவர்கள் தமது கோரிக்கையை முன்வைப்பதற்கும், அரசாங்கத்திடம் தீர்வை எதிர்பார்ப்பதற்கும் தகுதியுடையவர்கள். ஆனால், இந்தப் போராட்ட வடிவம் அவசியம்தானா? என்று அவர்கள் சிந்திக்கவேண்டும். பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட வாழ்க்கைச் சுமை காரணமாக, மக்கள் போதும் போதும் என்கின்ற அளவுக்கு வதைபடும் நிலையில், 'இலவச மருத்துவக் கட்டமைப்பை' முடக்கி வைத்திருப்பதும், மக்களைத் தனியார் மருத்துவமனைகள் நோக்கி நாடச் செய்வதும் பொருத்தமற்ற நடவடிக்கைகள். மருத்துவர்களின் பக்கம் நியாயம் இருந்தாலும். அவர்களின் கோரிக்கை சரிதான் என்றாலும், பரந்துபட்ட பேச்சுவார்த்தையே மிக அவசியம். ஏனெனில், பாதிக்கப்படுவது அமைச்சரோ அரசாங்கமோ அல்ல. மாறாக மக்களே. அவர்களின் வரிப்பணம்தான் மருத்துவர்கள் உருவாகக் காரணமாகவும் இருக்கின்றது, அரசாங்கம் இயங்க அடிப்படையாகவும் அமைகின்றது. இந்த உண்மையை மருத்துவர்கள் புரிந்துகொள்வார்களா?

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்**

**பொருள்:** முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.



# இலங்கைக்கு நேராக உச்சத்தில் சூரியன்

## ஏப்ரல் 15 வரை கடும் வெப்பம்

**கொழும்பு, ஏப்.6**

**சூரியனின் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிய நகர்வின் காரணமாக எதிர்வரும் ஏப்ரல் 15ஆம் திகதி வரை இலங்கை நிலப்பரப்புக்கு நேரே சூரியன் உச்சம் கொடுக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இதன்படி, இன்று நண்பகல் வேளையில் நாட்டின் பல பகுதிகளில் சூரியன் மிக நெருக்கமாக உச்சம் கொடுக்கவுள்ளது. சூரியன் உச்சம் கொடுக்கும் இந்த 10 நாள்களிலும் வழக்கத்தைவிட அதிக வெப்பம் நிலவக்கூடும் என்பதால், பொதுமக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும். உடலில் நீர்ச்சத்துக் குறையாமல் இருக்க அதிகளவு தண்ணீர் அருந்தவேண்டும். நண்பகல் வேளைகளில் தேவையற்ற முறையில் நேரடி வெயிலில் செல்வதைத் தவிர்க்கவேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)



# ஒரேநாளில் 592 பேர் கைது

கொழும்பு, ஏப்.6
நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 592 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
அதேவேளை, கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 229 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 121 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)




# யானைத் தாக்குதலில் நான்கு பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.6
நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற யானைத் தாக்குதல்களில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.
எப்பாவல, கெலேஅமுணு கொலய பகுதியில் இடம்பெற்ற காட்டு யானைத் தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளனர்.
அத்துடன், [illegible] பகுதியிலும் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார். இதேவேளை, தன மல்வில ஹம்பேகமுவ பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு யானைத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

# பெண் கொலை கணவர் கைது!

கம்பஹா , ஏப்.6
கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகவிற்ற பகுதியிலுள்ள வீடொன்றில் பெண் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்திருந்தார். குடும்பத்தகராறு காரணமாக உயிரிழந்த பெண்ணின் கணவரே அவரது கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளமை விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த பெண்ணின் 76 வயதுடைய கணவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)



# இணையமோசடிகள்; மக்கள் அவதானம்

கொழும்பு,ஏப்.6
பண்டிகைக் காலங்களில் தொலைபேசிகள் ஊடாக முன்னெடுக்கப்படும் இணையமோசடிகள் அதிகரித்துவருகின்றன என்று இலங்கை கணினி அவசரப் பதிலளிப்புப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.
எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டுக் காலத்தை முன்னிட்டு தள்ளுபடிகள், பரிசுப்பணம் அல்லது விசேட சலுகைகளை வழங்குவதாகக்கூறி போலியான விளம்பரங்கள் மற்றும் இணைய இணைப்புகள் சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையம் ஊடாகப் பரப்பப்படுகின்றன. எனவே இவ்வாறான சந்தேகத்திற்கிடமான இணைப்புகளை அழுத்தவேண்டாம். உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பரிமாறிக்கொள்வதை தவிர்க்குமாறும் தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - பங்குனி 24
07.04.2026
சுபநேரம் : 10.38 – 12.08
ராகுகாலம் : 03.08 – 04.38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நித்தகைக்குள சீரமைப்பில் அதிகாரிகள் அலட்சியம்!



## விவசாயிகள் அதிருப்தி

**யாழ்ப்பாணம், ஏப்.6**

**முல்லைத்தீவு, குமுழமுனையில் அமைந்துள்ள நித்தகைக்குளத்தின் சீரமைப்புப் பணிகளில் குறைபாடுகள் காணப்படுவதால் குளத்தின் நீண்டகால உறுதித்தன்மையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

குளக்கட்டுச் சீரமைப்புக்காகப் பயன்படுத்தப்படும் மண் தரம் பிரிக்கப்படாமல், மரவேர்களுடன் அப்படியே பயன்படுத்தப்படுகின்றது. மண்ணுடன் கலந்துள்ள மரவேர்கள் காலப்போக்கில் மண்ணுக்குள் மக்கிப்போகும். இதனால் குளக்கட்டின் உட்பகுதியில் இடைவெளிகள் அல்லது 'குமிழ்கள்' உருவாகும்.

மட்கிய வேர்கள் விட்டுச்செல்லும் துவாரங்கள் வழியாக நீர் கசிய ஆரம்பித்து, காலப்போக்கில் குளக்கட்டு பலவீனமடைந்து உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்படும். தரம் பிரிக்கப்படாத மண் முறையாக ஒன்றுடன் ஒன்று ஒட்டாது என்பதால், மழைக்காலங்களில் குளக்கட்டு கரைந்து போகும் வாய்ப்புகள் அதிகம்.

2 கிலோமீற்றர் நீளமான குளக்கட்டில் இதுவரை வெறும் 150 மீற்றர் பணிகளே நிறைவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகளையும் அவசரம் அவசரமாகத் தரமற்ற முறையில் முன்னெடுப்பது வரும் சிறுபோகச் செய்கையை எதிர்நோக்கியுள்ள 1,500 ஏக்கர் வயல் நிலங்களின் பாதுகாப்பைப் பாதிக்கும் என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டினர். இதுதொடர்பில் விவசாயிகள் விடுத்த கோரிக்கைகமைய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேரில் சென்று ஆராய்ந்தார். முறையற்ற சீரமைப்புப் பணிகளை உடன் தடுத்நிறுத்தவேண்டும். புனரமைப்புப் பணிகள், வெறும் கண்துடைப்புக்காகச் செய்யப்படக்கூடாது. இந்த விவகாரம் குறித்துக் கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள உயரதிகாரிகளின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு செல்லப்படும் என உறுதியளித்தார். (க-246)

## குப்பைமேடாக புதுக்குடியிருப்பு வீதி முறையான கழிவகற்றல் இல்லை!

### துர்நாற்றத்தால் மக்கள் அவதி

முல்லைத்தீவு,ஏப்.6

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பிரதான வீதியின் ஓரங்களில் தொடர்ச்சியாகக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால், அந்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

'பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றம்' எனப் பிரதேசசபையினால் எச்சரிக்கைப் பலகைகள் நடப்பட்டுள்ள போதிலும், நகர்ப் பகுதி மக்கள் தங்கள் வீட்டுக் கழிவுகளைச் சட்டவிரோதமாக இங்கு கொட்டி வருகின்றனர்.

குப்பைகள் அழுகிப்போயுள்ளதால் அந்தப் பகுதி முழுவதும் கடும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் பாதசாரிகள் மூக்கைப் பொத்திக்கொண்டு செல்லவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் சனத்தொகை அதிகமுள்ள நிலையில், பிரதேச சபையினால் முறையான கழிவகற்றல் திட்டங்கள் முன்னெடுக்கப்படாததே இந்தப் பிரச்சினைக்கு முதன்மைக் காரணமாகும். உடனடியாகப் பிரதேசசபை தலையிட்டு, வீதியோரக் கழிவுகளை அகற்றுவதுடன், நகர்ப்புற வீடுகளிலிருந்து கழிவுகளைச் சேகரிக்கும் நடைமுறையை முறைப்படுத்தவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-19)

## பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலையில் 19 மாணவர்களுக்கு 3 ஏ

யாழ்ப்பாணம்,ஏப்.6

கடந்த வாரம் வெளியான க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 19 மாணவர்கள் 3 ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். அத்துடன் கலைப்பிரிவு மாணவி சுலக்கசனா சுப்பிரமணியம் மாவட்ட ரீதியாக முதலிடத்தையும், தேசிய ரீதியாக 65ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். இந்தப் பாடசாலையில் 330 பேர் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில், 232 பேர் சித்தியடைந்துள்ளனர். 19 மாணவிகள் 3ஏ சித்தியையும், 12 மாணவிகள் 2ஏ, பி சித்தியையும், 3 மாணவிகள் 2ஏ, சி சித்தியையும், 8 மாணவிகள் ஏ,2பி சித்தியையும் பெற்றுள்ளனர்.

உயிரியல் பிரிவில் 13 மாணவிகளும், கலைப்பிரிவில் 4 மாணவிகளும், இயற்பியல் பிரிவில் 3 மாணவிகளும், வர்த்தகப்பிரிவில் ஒரு மாணவியுமாக 19 மாணவிகள் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். உயிரியல் பிரிவில் ஜபிஸனா சிறிவிக்னேஸ்வரராசா பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும், மாவட்ட ரீதியில் 11ஆவது இடத்தையும், தேசிய ரீதியில் 170ஆவது இடத்தையும், வர்த்தகப்பிரிவில் சிந்து தபேந்திரன் பாடசாலை மட்டத்தில் முதலாவது இடத்தையும், மாவட்ட ரீதியில் 8 ஆவது இடத்தையும், தேசிய ரீதியில் 487 ஆவது இடத்தையும், கணிதப்பிரிவில் சுதர்ஜனா சுபலிங்கம் பாடசாலை மட்டத்தில் முதலாவது இடத்தையும் மாவட்ட ரீதியில் 50ஆவது இடத்தையும், தேசிய ரீதியில் 692ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-100)

## வடமராட்சி இந்து மகளிர் 3 மாணவிகளுக்கு 3ஏ

யாழ்ப்பாணம்,ஏப்.6

அண்மையில் வெளியான க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில், 3 மாணவிகள் 3 ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். கலைப்பிரிவு மாணவி யோகபாஸ்கர் தனரூபிகா பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும், மாவட்ட ரீதியாக இரண்டாமிடத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (க-100)

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு காலம் தாழ்த்தாது நீதி வேண்டும்

### செல்வம் எம்.பி. கோரிக்கை


மன்னார்,ஏப்.6

நாட்டில் உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்பட்டு, தண்டனை வழங்கப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு காலம் தாழ்த்தாது நீதி வழங்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈஸ்டர் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

உயிர்த்த ஞாயிறு மக்கள் படுகொலை செய்யப்பட்ட கறுப்பு வரலாற்றை எம்மால் ஒருபோதும் மறக்கமுடியாது. கடந்த அரசாங்கமாக இருக்கட்டும், தற்போது ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கமாகட்டும், இதற்கான தீர்வை பெற்றுத் தருவதாகவும், சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்வதாகவும் வாக்குறுதி அளித்திருந்தனர்.

ஆனால் இதுவரை காலம் தாழ்த்தியே வருகின்றனர். விசாரணை என்ற பெயரில் உண்மைகளை மூடி மறைக்கின்ற செயற்பாடுகளே பெரும்பாலும் காணப்படுகின்றன. உயிரிழந்த ஆன்மாக்களுக்காக இந்த அரசாங்கம் ஒரு நியாயமான தீர்ப்பைப் பெற்றுத்தரவேண்டும்– என்றுள்ளது. (க-56)




## நெடுந்தீவுக்கு சீரான படகுச்சேவையில்லை

### தீவுப்பகுதி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்துச் சேவையை அரச படகுகள் கைவிட்டுள்ளதால், தனியார் படகுகளே தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளன. எனினும் இந்தப் படகுச்சேவையும் மக்களுக்குப் போதுமானதாக இல்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக் குறிகாட்டுவான் இடையிலான சேவையில் ஈடுபடும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்பிலுள்ள படகுகளில், குமுதினிப் படகு திருத்தவேலை காரணமாக சேவையில் இல்லை. அத்துடன் வடதாரகைப் படகு திருத்த வேலைகளுக்காகத் திருகோணமலையிலும், நெடுந்தாரகைப்படகு திருத்த வேலைகளுக்காக நெடுந்தீவிலும் என முடங்கியுள்ளன.

இதனால் தனியாரின் கரிகணன் படகே தற்போது பயணிகள் சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தப்படகும் காலைச்சேவையை நிறுத்தியுள்ளது. தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டுக் காலம் நெருங்கிவரும் நிலையில், வழமையான முற்பகல் 11.30 மணிச் சேவை நிறுத்தப்பட்டுள்ளமையால், உள்ளூர் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

படகுச் சேவைகள் தொடர்பாக உரிய திட்டமிடலின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர். எனவே நெடுந்தீவுக் குறிகாட்டுவான் இடையேயான பயணிகள் போக்குவரத்துச் சேவைக்கான மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளவேண்டும் என்று தீவுப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அழுகிய பழங்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஏப்.6

சாவகச்சேரிப் பொதுச் சந்தையின் பழ விற்பனை நிலையங்களில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட திடீர்ச் சோதனையின்போது, மனிதப் பாவனைக்கு உதவாத பெருமளவிலான அழுகிய பழங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சூ.குணசாந்தன் தலைமையில் இந்தச் சோதனையிடல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதே வேளை, நகரசபையின் தீர்மானத்திற்கமைய சந்தைப் பகுதியில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் பைகளைப் பயன்படுத்துவது குறித்தும் விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (ச-9)




# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 09.03.2026 திங்கட்கிழமையன்று சிவபதமடைந்த

அமரர்
**தயாபரன் பிரதீஸ்குமார்**
(குணா)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் **07.04.2026** செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில், பிடாரி அம்மன் கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்களின் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது இழப்பை அறிந்து, இதுவரை அனைத்து வகைகளிலும் உறுதுணையாய் இருந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மிகுந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

பிடாரி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

**குடும்பத்தினர்**
**0776220228**


# வெள்ளம் வடிந்தோடுவதற்கு வாய்க்காலாக மாறும் வீதி!

## அதிகாரிகளின் விசித்திர முடிவுக்கு பொதுமக்கள் எதிர்ப்பு

நல்லூர் மற்றும் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில், 25 ஆண்டுகளாகச் சேதமடையாமல் இருக்கும் உறுதியான தார் வீதியை உடைத்து, அதனைப் பள்ளமாக்கி வெள்ளநீர் வடிகாலாக மாற்ற அதிகாரிகள் எடுத்துள்ள முடிவுக்குப் பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் மற்றும் மூப்பர் ஒழுங்கைப் பகுதிகளில் மழைக்காலங் களில் ஏற்படும் வெள்ள அனர்த்தத்தைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து அதிகாரிகள் மட்டத்திலான சந்திப்புகள் நடைபெற்றுவந்தன. விளாத்தியடி வீதியிலுள்ள ஒடுங்கிய வாய்க்கால் வழியாக வெள்ளம் மெதுவாக வடிவதே இந்தப் பிரச் சினைக்குக் காரணம் என அடையாளம் காணப்பட்டது. இந்தநிலையில், அண்மையில் மக்கள் சந்திப்பின்போது, தமக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்புவதற்கு முன்பாக, உயரமாக இருக்கும் விளாத்தியடி தார் வீதியை உடைத்து, அதனைப் பள்ளமாக்கி வீதியையே ஒரு வாய்க்காலாக மாற்றப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

நல்லூர்ப் பிரதேசசபையினால் 25 வருடங் களுக்கு முன்னர் போடப்பட்ட இந்த வீதி, இன்றளவும் எவ்வித மேடுபள்ளமுமின்றி உறுதியாக உள்ளது. இதனை உடைப்பதற்குப் பதிலாக ஏற்கனவே இருக்கும் வடிகாலமைப்பை முறையாகப் புனரமைத்தல், வீதியின் மறுபுறத்தில் புதிய பலமான வடிகாலமைப்பை உருவாக்கி நீரை வேகமாக வெளியேற்றுதல் என்பன தீர்வாகவுள்ளன. கஷ்டப்பட்டு அமைக்கப்பட்ட ஒரு பலமான வீதியை அழிப்பதுதான் தீர்வா? ஒரு முறையான வடிகாலமைப்பை உருவாக்குவதை விடுத்து, போக்குவரத்துக்குப் பயன்படும் வீதியையே பள்ளமாக்கி நீரோட்டத்தை ஏற்படுத்த முயல்வது அதிகாரிகளின் பொறுப்பற்றத் தன்மையைக் காட்டுகிறது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச-55)

# அரிசி இறக்குமதிக்கு வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஏப்.6

நாட்டில் நிலவும் சம்பா மற்றும் கீரிச் சம்பா அரிசித் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதற்காக, அதற்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய சில அரிசி வகைகளை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கி அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க வினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க, இறக்குமதியாளர்கள் இனி 'ஜி.ஆர். 11' ரக அரிசியை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் பொன்னிச் சம்பா மற்றும் கீரி பால் பொன்னி ஆகிய அரிசி வகைகள் அடங்குவதுடன், இவை சம்பா மற்றும் கீரிச் சம்பா அரிசி வகைகளுக்குப் பொருத்தமான மாற்றீடுகளாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. (ச-இ)

# எரிபொருள்கள் விலையேற்றத்தால் கடலுணவுகளின் ஏற்றுமதி பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.6

எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் யாழ்.மாவட்டத்தில் கடலுணவுகளின் ஏற்றுமதி திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு எரிபொருள்களின் விலையேற்றமே காரணம் என்று கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். வெளிமாட்டங்களிலிருந்து குறிப்பாக தென்பகுதியிலிருந்து ஏற்றுமதியாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதருவதைக் குறைத்துள்ளனர். இதனால் கடலுணவுகள் பெருமளவு வாடிகளில் தேக்கமடைந்துள்ளன. நண்டு, கணவாய் மற்றும் மீன் போன்றவன்றின் விலையும் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன் குறைந்த விலைக்கு உள்நாட்டுச் சந்தைகளுக்கு கடலுணவுகளை விற்பனை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Invitation for Bids (IFB)
## Democratic Socialist Republic of Sri Lanka
## Nallur Pradeshiya Sabha, Kokuvil.
## Northern Province

**Bidding Documents for Procurement for Hiring of Vehicle with Driver**

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Nallur Pradeshiya Sabha, Kokuvil, Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Procurement for Hiring of Vehicle with Driver as in table below and all bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. Interested eligible bidders may obtain further information on public working days between 09:00 hrs and 15:00 hrs from 06th April 2026 to 20th April 2026 from Chairman, Nallur Pradeshiya Sabha, Kokuvil and inspect the bidding documents at the same place on the above time.
TP: 021 2222700, E-mail: npsnallur@gmail.com
4. A complete set of Bidding Document is English language may be purchased by interested bidders on submission of a written application to the address Chairman, Nallur Pradeshiya Sabha-Kokuvil from 06th April 2026 until 20th April 2026 from 09.00 hrs to 15.30 hrs on public working days and upon payment of non-refundable fee of Rs 1,000.00 (Including all Taxes). The method of payment should be by cash.
5. Complete Bids must be delivered to the address below in two copies as original and the duplicate. The original and duplicate should be enclosed separately and mark "Original" and "Duplicate" respectively in sealed envelopes. Both envelopes should be marked the "Bid Number" on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to Chairman, Divisional Procurement Committee, Nallur Pradeshiya Sabha, Kokuvil on or before 21st April 2026 at 11.00 hrs. The Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
6. The Pre-Bid Meeting will be held at Nallur Pradeshiya Sabha-Kokuvil on 16th April 2026 at 15.00 hrs, Interested Bidders may Participate in this Meeting their own expenses.
7. The Bid shall be valid up to 63 days after the deadline for Bid Submission. All bids shall be accompanied by Bid Security as stated in the Table above

| S. No | Name of Item | Bid No | Bid validity period from date of opening | Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Amount | Required period |
| 1 | Procurement for Hiring of Vehicle with Driver | NP/14/41(10)/03/Acct/Proc/Hiring of Vehicle/2026 | 63 Days | 30,000.00 | 06.07.2026 |

Chairman
Divisional Procurement Committee
Nallur Pradeshiya Sabha
Kokuvil

06.04.2026

(CR/47340) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 08 . 1942



இறப்பு 04 . 04 . 2026

### செல்வி இந்திராணி தம்பிப்பிள்ளை

நாரந்தனை கிழக்கு வைரவர் கோவிலடியை சேர்ந்த செல்வி இந்திராணி தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று முன்தினம் (04.04.2026) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசரத்தினம், லோகேஸ்வரி, கோபாலபிள்ளை, தியாகராஜா, புஸ்பராணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நாவலடி ஒழுங்கை, மானிப்பாய் (சுதுமலைச்சந்தியருகில்) இல்லத்தில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செல்விகா செல்லத்தம்பி
நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்

(CS/61153) J-1

## ஆக்கம் கோரல்

மிருசுவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலய நூற்றாண்டு விழாவையொட்டி வித்தியாலய விழாக்குழுவினரால் வெளியிடப்படவுள்ள மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கங்களை வித்தியாலய முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் வித்தியாலய ஆசிரியர்கள் அனுப்பிவைக்கலாம்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களைச் சமர்ப்பிக்குமாறு அதிபர் தலைமையிலான மலர்க் குழு அறிவித்துள்ளது. (ச-9)

## மரண அறிவித்தல்

மலர்வு 06 . 02 . 1934



உதிர்வு 03 . 04 . 2026

### அரியரத்தினம் தனேஸ்வரி

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியரத்தினம் தனேஸ்வரி அவர்கள் 03.04.2026 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - நாகபிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம் - நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குமாரகுலசிங்கம் அரியரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், கிருஸ்ணராஜா, கிருஸ்ணலீலா, புவனேஸ்வரி (வதனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தி, காலஞ்சென்ற அருளானந்தன் மற்றும் சிவனேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜித்தா, கோபி, சாளினி, சர்மிலன், சிந்துஜா, மயூரன், நிரூஜன், சுஜேன், பற்சன், பானு, ஹார்மன், நிகோ ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், டைசன், லியானா ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நேசம்மா, பொன்னுத்துரை, இராஜேஸ்வரி, இராசலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (07.04.2026) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோவிலடி,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்
074 304 0947

(C[illegible]351) N-1

## மரண அறிவித்தல்

மலர்வு 14 . 06 . 1958



உதிர்வு 27 . 03 . 2026

### யோகராசா புஸ்பராணி

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட யோகராசா புஸ்பராணி கடந்த 27.03.2026 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிறீகாந்தா, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராசாவின் அன்பு மனைவியும், துஷிகா, நிருசிகன், நிதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தங்கராசா, இரட்ணேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, நடராசா மற்றும் பரம் திலகா, காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Friedhof Sinsheim ZUM Friedhof 74889 Sinsheim ல் (07.04.2026) செவ்வாய்க்கிழமை 11.00 மணிலிருந்து நடைபெறும்.

இல.01, மதவடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
076 843 0149

தகவல்:
சகோதரி
சிவராசா புனிதவதி

(CS ) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பொருளாதாரத்துக்கு மத்திய கிழக்குப் போர் பேரிடி!

## அரசியல் ஆய்வாளர் டியூடர் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.6**

**மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழல் தொடர்ந்து நீடித்தால், இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகள் முன்னெப்போதும் இல்லாத வகையிலான மிகப்பெரிய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் டியூடர் வீரசிங்க எச்சரித்துள்ளார்.**

தற்போதைய கள நிலைவரங்கள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

மத்திய கிழக்கின் இந்தப் போர்ச் சூழல் தற்போது வெறும் இராணுவ மோதலாக மட்டும் இல்லாமல், ஒரு பொருளாதார நெருக்கடியாக உருவெடுத்துள்ளது.

இது உலகப் பொருளாதாரத்தையே ஆட்டிப்படைக்கும் ஒரு காரணியாக மாறியுள்ளது.

இந்த நிலைமை இதே வேகத்தில் தொடர்ந்தால், அது உலகளாவிய ரீதியில் ஒரு பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். தொடர்புடைய நாடுகள் போரை நிறுத்துவதற்கான எந்தவொரு விருப்பத்தையும் காட்டாதது ஆசிய நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகும்.

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு மற்றும் வளப்பற்றாக்குறையினால் அந்தந்த நாட்டு அரசாங்கங்களுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் மற்றும் எதிர்ப்புகள் அதிகரிக்கக்கூடும்.

ஒரு ஆசிய நாடு என்ற ரீதியில் இலங்கையும் இந்தச் சவால்களிலிருந்து தப்பமுடியாது. எரிபொருள் விலை உயர்வு, இறக்குமதிச் சிக்கல்கள் மற்றும் உள்நாட்டு அரசியல் ஸ்திரமற்ற தன்மை போன்ற இக்கட்டான சூழ்நிலைகளை இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

அமைதியை நிலைநாட்ட சர்வதேச நாடுகள் உடனடியாகத் தலையிடத் தவறினால், இதன் விளைவுகள் போர்க்களத்தைத் தாண்டி ஆசியாவின் சாமானிய மக்களின் அடுப்பாங்கரை வரை எதிரொலிக்கும் - என்றார். (ச-இ)

# உர விலையைக் குறைக்க புதிய ஒதுக்கீட்டு முறை!

கொழும்பு, ஏப்.6

சந்தையில் உர விலையைக் கட்டுப்படுத்தி, விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உரத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், அரசாங்கத்தின் நேரடித் தலையீட்டுடன் புதிய ஒதுக்கீட்டு முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக விவசாயப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

சந்தையில் நிலவும் உர விலையேற்றத்தைத் தடுத்து, தட்டுப்பாடின்றி உரத்தை விநியோகிப்பதற்காக இந்த ஒதுக்கீட்டுமுறை நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் 'ஒவ்வொரு விவசாயிக்கும் தேவையான உரம் தடையின்றி கிடைப்பது உறுதிசெய்யப்படும் என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)



# கனடாவில் துப்பாக்கிச்சூடு; இருவர் பலி

றொறண்டோ, ஏப்.6

கனடாவின் பிராம்ப்டன் பகுதியில் உள்ள பள்ளி வளாகம் ஒன்றில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். பள்ளி மைதானத்தில் ஒரு குழுவினரிடையே ஏற்பட்ட மோதல் முற்றிய நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பீல் பிராந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# ஈரானில் வீழ்ந்த அமெரிக்க விமானி எதிரி வளையத்துள் நுழைந்து மீட்பு!

## ட்ரம்ப் பெருமிதம்

கொழும்பு, ஏப்.6

ஈரான் மீதான வான்வழித் தாக்குதலின்போது சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்காவின் போர் விமானத்தின் இரண்டாவது விமானியையும் ஈரானியப் படைகளின் பிடியில் சிக்காமல் அமெரிக்க இராணுவம் அதிரடியாக மீட்டுள்ளது. அமெரிக்க வரலாற்றிலேயே இது ஒரு மிகத் துணிச்சலான மீட்பு நடவடிக்கை என அதிபர் ட்ரம்ப் வர்ணித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரானின் தெற்குப் பிராந்தியத்தில் கடுமையான தாக்குதல்களை நடத்திவருகின்றன.

இந்தப் போரின்போது ஈரானியப் படைகளால் அமெரிக்காவின் அதிநவீன போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. விமானத்தில் இருந்த இரண்டு விமானிகளும் பாரசூட் மூலம் கீழே குதித்து உயிர்தப்பினர்.

விமானம் வீழ்ந்த உடனேயே ஒரு விமானி அமெரிக்கப் படைகளால் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டார். மற்றொரு 'ஆயுத அமைப்பு அதிகாரி' ஈரானின் மிக அபாயகரமான மலைப்பகுதிகளில், எதிரிகளின் பாதுகாப்பு வளையத்துக்குள் சிக்கிக்கொண்டார். ஈரானியப் படைகள் அவரை நெருங்கிக்கொண்டிருந்ததால் நிலைமை மிகவும் மோசமடைந்தது. அதிபர் ட்ரம்ப்பின் நேரடி உத்தரவின் பேரில், அமெரிக்கத் தலைமைத் தளபதி, கூட்டுப் படைத்தலைவர்கள் மற்றும் சக வீரர்கள் 24 மணிநேரமும் அவரது இருப்பிடத்தை நவீன தொழில்நுட்பங்கள் மூலம் கண்காணித்தனர்.

ஒரு நாளுக்கும் மேலாக நீடித்த இந்தத் தீவிர தேடுதல் வேட்டையின் முடிவில், அந்த வீரர் பத்திரமாக மீட்கப்பட்டார். அவருக்குச் சில காயங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், அவர் நலமடைந்து விடுவார் என ட்ரம்ப் உறுதியளித்துள்ளார். போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஈரானுக்குக் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ள போதிலும், அமெரிக்கா தனது தாக்குதல்களைத் தளர்த்தவில்லை. (ச-இ)


# வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு, இலவசமாக விலங்குவிசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. அதற்கமைவாக இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை நெடுங்குளம் தாய்மார் கழகத்திலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை வசந்தபுரம் சி.சி.சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை கொலன் தோட்டத்திலும், நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை மூன்றாம் குறுக்குத் தெரு கொழும்புத்துறையிலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை முதலாம் குறுக்குத் தெரு கொழும்புத்துறையிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இரண்டாம் குறுக்குத் தெரு கொழும்புத்துறையிலும், நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை எழிலூர் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை 5 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறையிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை சுவாமியார் வீதி சிகிச்சை நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

தொடர்ந்து எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை மகேந்திரபுரத்திலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை வளன்புரத்திலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை சென்.மேரீஸ் கோயிலிலும், எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை எ.வி. வீதி புகையிரத வீதிச் சந்தியிலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கொழும்புத்துறை விதானையார் லேனிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பாசையூர் சனசமூக நிலையத்திலும், எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை நடமாடும் சேவையூடாகவும், எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை ஈச்சமோட்டை சனசமூக நிலையம் பாசையூரிலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை புதுக்குடியிருப்பிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பாண்டியன் தாழ்விலும், எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை வில்வந்தெருவிலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை புளியடிச் சந்தி இலந்தைக்குளத்திலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்திலும், எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை விதானையார் லேன் ஈச்சமோட்டையிலும் , முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை பாசையூர் மகப்பேற்று நிலையத்திலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை அண்டிக்குழி சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (க-27)

## கைலாசநாதப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.6

நல்லூர் கைலாசநாதப் பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

அதிகாலை 4 மணி தொடக்கம் வழிபாடுகள் ஆரம்பமாகி, பரிவார யாகசாலைகளில் 10ஆம் கால யாகபூசை நிறைவு பெற்று, தொடர்ந்து விநாயகர், சிவன், அம்பாள் யாக சாலை உபசாரப் பூசையுடன் பிரதான கும்பங்கள் வீதியுலா கொண்டுவரப்பட்டன. தூபிகள் அபிஷேகிக்கப்பட்டதும், கைலாச விநாயகர், கைலைநாயகி சமேத கைலாசநாதர், பஞ்சமுக கணபதி, ஸ்கந்தப்பெருமான் உள்ளிட்ட அனைத்து மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது. தொடர்ந்து தசதர்சனம், ஆசீர்வாதம் என்பன இடம்பெற்றன. (க-17)



படங்கள் - சிவசாந்தன்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் பூரணை நாளான கடந்த புதன்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இடம்பெற்றது.


ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ்சுவாமிகள் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (எ-41-66)



தாய்லாந்தை தலைமைச் செயலகமாகக் கொண்டு இயங்கிவரும், ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட தலைமை அதிகாரியாக ஹிந்துஜா குலேந்திரன் கடந்த 18ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். ஆசிய மனித உரிமைகள் பேரவையின், கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் இவருக்கான நியமனம் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)





கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் பங்குனி உத்தர உற்சவம் கடந்த புதன்கிழமை மாலை பக்திபூர்வமாக நடைபெற்றது. சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, நகுலேஸ்வரப் பெருமான் தேவி சமேதரராக உள்வீதி உலா வரும் திருக்காட்சி இடம்பெற்றது. (க-66)

## கரப்பந்தாட்டப் போட்டியில் அதிசயம் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்.6

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப்பிரிவின் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில், புலோப்பளை அதிசயம் விளையாட்டுக்கழக அணி சம்பியன் பெற்றது.

இந்த வருடத்துக்கான பிரதேசமட்ட தடகள, மைதான விளையாட்டுப்போட்டிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. முதலாது போட்டியாக ஆண் மற்றும் பெண்கள் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் இத்தாவில் கெனடி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் புலோப்பளை அதிசயம் அணியும், தம்பகாமம் இந்து இளைஞர் அணியும் மோதின. இறுதியில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக்கழக அணி பிரதேச சம்பியனைப் பெற்றது. (க-9)

## திண்மக்கழிவுகளைத் தரம்பிரித்துத் தரவும்

### பருத்தித்துறை நகரசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.6

தூய்மையான நகரத்தை உருவாக்கும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும்வகையில், மக்கள் வீடுகளில் சேரும் திண்மக்கழிவுகளைத் தரம்பிரித்து வழங்க வேண்டும் என்று பருத்தித்துறை நகர் வாழ் மக்களிடம், நகரசபை உபதவிசாளரும், சுகாதாரக்குழுத் தலைவருமான தேவசிகாமணி தேவராஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மக்கள் வீடுகளில் சேரும் குப்பைகளைத் தரம்பிரித்து வைக்கவேண்டும். வெட்டப்படும் தாவரக்கழிவுகளை, குறிப்பாக தென்னை ஓலைகள், வாழைமரம், மரம், செடிகளை அப்படியே போடாது, அவற்றைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஒன்றாகக்கட்டி, வீதியோரமாக வைத்து ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில், எமது ஊழியர்களால் இலகுவாகவும், விரைவாகவும் அவற்றை அகற்றமுடியும்.



தாவரக்கழிவுகள் ஒவ்வொரு புதன்கிழமையும் நகரசபையின் திண்மக்கழிவகற்றல் வாகனத்தின் ஊடாக அப்புறப்படுத்தப்படும். வீதிகளில் குப்பைகள் அப்புறப்படுத்தப்படாதநிலையில் எமக்குத் தெரியப்படுத்தவும்- என்றார். (க-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பட்டப்பகலில் வீடு உடைத்து தங்க நகை, பணம் திருட்டு!

### சந்தேகநபர் ஒருவர் கைது

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் வீட்டில் யாருமில்லாத சமயம் பட்டப்பகலில் கதவு உடைத்து தாலிக்கொடி உட்பட தங்க நகைகள், பணம் என்பன திருடப்பட்டுள் ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுன்னாகம்பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மணியகாரன் வீதியில் உள்ள வீடொன்றில் நடந்துள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கணவரும் வேலைக்குச் சென்ற நிலையில், மனைவி மகளைக் குப்பிழான் வடக்குப் பகுதியிலுள்ள சனசமூக நிலையமொன்றில் இடம்பெற்ற மேலதிக வகுப்புக்காக வழமை போன்று மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றுள்ளார். வகுப்பு நிறைவு பெறும்வரை அங்கேயே காத்திருந்து மாலை 5 மணியளவில் மகளை வீட்டுக்கு அழைத்து வந்துள்ளார். அதைச் சாதகமாகப் பயன்படுத்தி வீட்டின் முன்கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், வீட்டு அறைக் கதவுகள், அலுமாரி என்பவற்றை உடைத்து 11 பவுண் தாலிக் கொடி, தங்கச் சங்கிலிகள் என 15 பவுண் தங்க நகைகளையும், 40 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். மோப்பநாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-66)

## 9 கப்பல்கள்...

மக்கள் விடுதலை முன்னணியால் மாத்தறையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மத்திய கிழக்கில் ஏற்பட்ட போர்ச் சூழலால் உருவான எரிசக்தி நெருக்கடியை அரசாங்கம் தற்போது வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்துள்ளது. அதனால் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்ட புதன்கிழமையை மீண்டும் வேலை நாளாக மாற்றுவதற்கும், கியூ.ஆர். முறைமை மற்றும் ஒற்றை இரட்டை இலக்க முறைமைகளை நீக்கி நிலைமையை வழமைக்கு கொண்டுவரவும் விரைவில் நடவடிக்கை எடுக்க முடியும். ஆரம்பத்தில் ஓரிரு வாரங்கள் சிரமங்கள் இருந்தன, வரிசைகள் உருவானது உண்மைதான். அதனால் உடனடி நடவடிக்கையாக கியூ.ஆர். முறைமை மற்றும் ஒற்றை இரட்டை இலக்க விநியோக முறையை அறிமுகப்படுத்தினோம். புதன்கிழமையை விடுமுறை நாளாக அறிவித்தோம். தற்போது வரிசைகளை இல்லாமல் செய்துள்ளோம். இன்னும் சில நாள்களில் அந்த முறைகள் தேவையில்லை என்றால், அவற்றை நீக்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

புதன்கிழமை விடுமுறையைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. நிலைமை சீரானதும் தேவையேற்படும்போது மீண்டும் வேலைகளை ஆரம்பிப்போம். எரிபொருள் கப்பல்கள் வருவதில் தாமதம் ஏற்பட்டதாலேயே அந்த நேரத்தில் அத்தகைய முடிவுகளை எடுத்தோம். ஆனால் இப்போது அச்சப்படத் தேவையில்லை. இந்த மாதத்தில் மேலும் 9 கப்பல்கள் வரவுள்ளன-என்றார். (அ-எ-இ)

## எரிபொருள்...

சோதனை நடவடிக்கைகளில் இந்தக் கைதுகள் நடந்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யு.வூட்லர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்த சோதனை நடவடிக்கைகளில் மொத்தம் 52 ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான எரிபொருள் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. 47,006 லீற்றர் டீசல், 2,668 லீற்றர் பெற்றோல், 2,706 லீற்றர் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டுள்ளன.

உலகளாவிய எரிசக்தி நெருக்கடிக்கு மத்தியில், எரிபொருளைச் சட்டவிரோதமாக பதுக்கி வைத்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பவர்களைக் கண்டறியும் நோக்கில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக இந்தச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-எ-இ)

## பெற்றோலிய...

செயற்குழு உறுப்பினர் டி.வி. சாந்த சில்வா இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது பின்பற்றப்படும் 'ஒற்றை இரட்டை' இலக்க எரிபொருள் விநியோக முறையால் ஊழியர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன், நிலையங்களின் பணிகளும் பாதிக்கப்படுகின்றன. புதிய நிர்வாகத்தால் எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வந்த 3 சதவீத இலாபப் பங்கு நீக்கப்பட்டுள்ளது.

டீசல் மற்றும் பெற்றோல் விநியோகங்கள் திட்டமிட்டபடி நடைபெறாமையால் எரிபொருள் நிலையங்களை வினைத்திறனாக முன்னெடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இந்தத் தொடர்ச்சியான பிரச்சினைகள் எரிபொருள் நிலையங்களின் நிலைத்தன்மையை கடுமையாகப் பாதிக்கின்றன.

இன்று முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டத்தின் ஊடாக உரிய அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க விநியோகஸ்தர்கள் எதிர்பார்த்துள்ளனர்-என்றார். (அ-எ-17)

## பேச்சு...

தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் பிரபாத் சுகததாச தெரிவித்துள்ளதாவது:-

சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு அமைச்சர் தயக்கம் காட்டுகின்றார். அதனாலேயே தொழிற்சங்க நடவடிக்கை நீடிக்கின்றது. அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தொழிற்சங்க நடவடிக்கையின் அடுத்தகட்ட தீர்மானத்தை எடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

நோயாளிகளை அசௌகரியப்படுத்த வேண்டாம் என்று நாம் ஏற்கனவே சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். சுகாதார அமைச்சர் தீர்மானங்களை எடுக்கத் தயங்குவதாலேயே நோயாளிகளுக்கான சிகிச்சைச் சேவைகள் பாதிக்கப்படுகின்றன. அவர் பேச்சு மேசைக்கு வரத் தயார் என்று அறிவித்தால் அடுத்த நிமிடமே தொழிற்சங்க நடவடிக்கையில் இருந்து விலகுவது தொடர்பாக எம்மால் தீர்மானிக்க முடியும்.

நாளை (இன்று) காலை 8 மணி வரை சுகாதார அமைச்சருக்கு அவசியமான தலையீட்டை மேற்கொள்ள அவகாசம் வழங்கியுள்ளோம். இது தொடர்பாக ஜனாதிபதிக்கும் நாம் தெரியப்படுத்தியுள்ளோம். காலை 8 மணிக்குள் அவர் இணக்கம் தெரிவித்தால், போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதா? இல்லையா என்பதை எமது நிறைவேற்று சபை ஊடாகத் தீர்மானிக்க முடியும்-என்றார். (அ-எ-இ)

## விபத்தில்...

இவர் சைக்கிளில் கடைக்குச் சென்ற போது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. அதன்பின்னர் வீட்டுக்குச் சென்ற அவர், நடந்ததைக் கூறிவிட்டுச் சிறிது நேரத்தில் மயக்கமடைந்துள்ளார். உறவினர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்த போதும், அவர் சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## எரிபொருள் வழங்க...

பெற்றன. இந்த நிலையிலேயே சீனா தற்போது பச்சைக்கொடி காட்டியுள்ளது. இலங்கைக்கான சீனத் தூதுவர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரை நேற்று சந்தித்துப்பேச்சு நடத்தினார். அதில் சீனா எரிபொருளை விநியோகிக்கும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதற்கமைய சீனாவில் இருந்து முதல் எரிபொருள் ஏற்றுமதி இந்த மாத நடுப்பகுதியில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீன நிறுவனமான சினோபெக் எனர்ஜி லங்காவின் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அனுப்பப்படும் எரிபொருள் இருப்புகளுக்கு மேலதிகமாக இந்த விநியோகம் இடம்பெறும் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, இந்தியாவும் இலங்கைக்கு எரிபொருளை சில நாட்களுக்கு முன்னர் அனுப்பி வைத்திருந்தது. ரஷ்யாவுடனும் பேச்சு நடத்தப்பட்டுவருகின்றது. அந்நாட்டின் எரிசக்தி மற்றும் வெளிவிவகார பிரதி அமைச்சர்கள் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர். (அ-எ-44)

## ரஷ்யா...

பிரதி வெளியுறவு அமைச்சர் அன்ட்ரே ருடென்கோ மற்றும் பிரதி எரிசக்தி அமைச்சர் ரோமன் மார்ஷவின் ஆகியோர் கடந்த வாரம் கொழும்புக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர். ஜனாதிபதி மற்றும் உயர்மட்ட பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடினர். இந்தப் பின்னணியில் விஜித ஹேரத்தின் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றது.

அதேவேளை, ரஷ்யாவில் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை அமெரிக்கா தற்போது தளர்த்தியுள்ளது. (அ-எ-44)

## எரிவாயு...

சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 308 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை ஆயிரத்து 910 ரூபாவாகும்.

2.3 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 140 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 890 ரூபாவாகும்.

12.5 கிலோ கிராம் நிறையுடைய லாஃப்ஸ் சமையல் எரிவாயு கொள்கலனின் விலை ஆயிரத்து 70 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 5 ஆயிரத்து 700 ரூபாவாகும்.

5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 418 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 2 ஆயிரத்து 280 ரூபாவாகும். (அ-எ-இ)

## டிஜிட்டல்...

நகர்த்துவதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

5 ஆயிரம் ரூபா வரையிலான அனைத்து LankaQR கொடுக்கல் வாங்கல்களுக்கு வர்த்தகர்களிடமிருந்து அறவிடப்படும் சேவைக்கட்டணத்தை இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில், முழுமையாக நீக்குவதற்கு நிதி நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. இதன்மூலம் சிறு வர்த்தகர்கள் எவ்வித கூடுதல் செலவுமின்றி டிஜிட்டல் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் மிகவும் வலுவான டிஜிட்டல் நிதி உட்கட்டமைப்பு காணப்படுகின்றது. இருப்பினும், பொருளாதாரத்தில் இன்னும் 1.48 டிரில்லியன் ரூபா பெறுமதியான நாணயத்தாள்கள் புழக்கத்தில் உள்ளன. 2025ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டு நிலவரப்படி, LankaQR மூலம் மாதத்துக்குச் சுமார் 395,000 ரூபா பெறுமதியான மிகக்குறைந்த அளவிலான கொடுக்கல் வாங்கல்களே இடம்பெற்றுள்ளன. இந்த இடைவெளியைக் குறைப்பதற்காக இன்று ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்தின் கீழ் சில விசேட மூலோபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. கியூ.ஆர். பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்காக விசேட அதிர்ஷ்ட லாபப் போட்டித் திட்டமும் செயல்படுத்தப்படவுள்ளது. நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் பங்காளிகளாக்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## மாயமான...

இரு மீனவர்கள், கோடியக்கரை கடலில் வைத்து மீட்கப்பட்டு பத்திரமாக கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

சுப்பர்மடம் பகுதியில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை கடலுக்கு மீன் பிடிக்க சென்ற தனபாலசிங்கம் குணபாலசிங்கம் (வயது45) மற்றும் செபஸ்தியான்பிள்ளை சந்திரலிங்கம் (வயது35) ஆகிய இரு மீனவர்கள் காணாமல் போயிருந்தனர். அவர்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில், சக மீனவர்கள் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இது தொடர்பில் உறவினர்கள் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தநிலையில் இருவரும் கடலில் வழி மாறி சென்று தமிழ்நாடு கோடியக்கரை கடலில் தத்தளித்துக் கொண்டுள்ளனர் என்று தமிழக மீனவர்களது தொலைபேசி மூலம் தகவல் கிடைத்துள்ளது. படகில் சென்ற சக மீனவர்கள் இருவரையும் நடுக்கடலில் வைத்து பத்திரமாக மீட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் கரைக்கு கொண்டுவந்துள்ளனர். (அ-எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கைலாய ஆதீனம் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.6

திருக்கைலாயப் பரம்பரை தருமை ஆதீனம் 27ஆவது நட்சத்திரக் குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஒருநாள் பயணமாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தார். பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அவருக்கு விமான நிலையத்தில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகத்தில் தருமையாதீன திருமுறை வகுப்புச் சிங்கள மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார். அதனைத் தொடர்ந்து நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்ற சைவசித்தாந்தக் கலாநிதி, சைவசித்தாந்தப் புலவர் பட்டப்படிப்புக்களுக்கான தொடக்க விழாவிலும் பங்கேற்றார். (க-66)

# மாகாணசபை முறைமையும் அதிகாரப்பகிர்வும் கருத்தாடல்

கிளிநொச்சி,ஏப்.6



ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில் மாகாணசபை முறைமையும் அதிகாரப்பகிர்வும் எனும் தலைப்பிலான கருத்தாடல் அரங்கு, கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. கருத்தாடலில் ஓய்வுநிலை மூத்த நிர்வாக அதிகாரி இரேனியஸ் செல்வின், ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி. சுப்பிரமணியம் சிவகுமார், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவன நிறுவுநர் பெரியசாமி முத்துலிங்கம், ஆய்வாளர் ஹரிந்திரா டீ.திசாநாயக்க, வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், மூத்த ஊடகவியலாளர் வீரகத்தி தனபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றினர். நிகழ்வில் கட்சிகளின் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-66,113, 214)

# அனலைதீவு படகுச்சேவைக் கட்டணங்கள் அதிகரிப்பு

எரிபொருள்களின் விலை அதிகரிப்பினையடுத்து ஊர்காவற்றுறைகண்ணகை அம்மன் இறங்குதுறையிலிருந்து அனலைதீவுக்கான பயணிகள் படகுச்சேவையின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

அதன்படி பயணிகள் ஒருவழிக் கட்டணம் 100 ரூபாவிலிருந்து 120 ரூபாவாகவும், மோட்டார் சைக்கிளுக்கு 120 ரூபாவிலிருந்து 150 ரூபாவாகவும், படகில் ஏற்றப்படும் பெரல்கள் மற்றும் மூடைகளுக்கு கிலோவுக்கு 1 ரூபாவிலிருந்து 2 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

ENGLISH CLASSES
Zoom அல்லது தனியாகவும்
அல்லது குழுவாகவும்
வீடு வந்து கற்பிக்கப்படும்.
Students, Workers and for University students
*Grammar *Spoken
T.P: 077 33 14 608

தனியார் வகுப்புகள் (Personal Classes)
A/L மாணவர்களுக்கான
• இரசாயனவியல் (Chemistry) • பௌதீகவியல் (Physics) • உயிரியல் (Biology)
ஆகிய பாடங்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிமூலம்
(English and Tamil medium) வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.
தரம் 6 தொடக்கம் O/L வரை விஞ்ஞானம், கணிதம், ICT.
தொடர்புகளுக்கு:- 074 075 9308

# அனலைதீவில் மருத்துவமுகாம்

அனலைதீவு பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை அனலைதீவுப் பிரதேச மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.யாழ். போதனா மருத்துவமனை, ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை, ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் ஆகியவற்றின் மருத்துவர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். இதன்போது குருதியமுக்கம், நீரிழிவு, இதயநோய், பெண்நோயியல், கர்ப்பிணிகள், புற்றுநோய், பற்சுகாதாரம், கண், குழந்தைகள் மருத்துவம் போன்ற பரிசோதனைகள் நடத்தப்படுவதுடன் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. (ச-9)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.04. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.